THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) No allotment of either wheat or rice was made during the years 1957 and 1958 by the Central Government to this State Government.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, ஒரிசா அரிசியை உண்ண மாட்டோம்; உத்திரப் பிரதேச கோதுமையை வாங்க மாட்டோம்; பஞ்சாப் பருப்பை பார்க்கவே மாட்டோம் என்று பிரசாரம் செய்து வருகிற திராவிட மகரிஷிகளுக்குத் தனியாக அரசாங்கம் அரிசி தயார் செய்து கொடுக்கப் போகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஏதும் பிரசாரம் நடைபெறுவதாகத் தெரியவில்லை. உணவு விஷயத்தில் யாரும் இந்த மாதிரிப் பிரசாரம் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the allotment was not made because we did not ask for it or whether it was not allotted in spite of our asking?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of allotment to this Government. There are dealers who get the allotment from the Central Pool.

Nagercoil Transport Depot

MR. SPEAKER : கேள்வி எண். 172. அங்கத்தினர் கனம் டி. எஸ். ராமசாமி சபையில் இல்லாததால் இந்தக் கேள்வியும் அதன் பதிலும் சட்டசபை நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்படும்.

* 172 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received any communication from the Chairman of the Estimates Committee (1958–59) regarding the storage of unaccountable petrol in the Nagercoil Transport Depot; and

(b) the steps taken by the Government to take appropriate action against any irregularity?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) Necessary instructions were issued to the District Transportation Superintendent, Nagercoil to maintain proper account in respect of the fuel drained from vehicles.

Agriculture and Veterinary College

* 173 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயம், கால்நடைக் கல்லூரிகளுடைய போதனை முறைகளையும், ஆராய்ச்சிகளையும் அதிகப்படுத்துவதற்காக அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவால் உதவி செய்யப்பட்டத் தொகையிலிருந்து சென்னை ராஜ்யத்திலுள்ள எந்தெந்த கல்லூரிகளுக்கு எவ்வளவு உதவி அளிக்கப்பட்டது?

14th December 1959]

(ஆ) இக் குழுவால் அளிக்கப்பட்ட உதவித் தொகையி லிருந்து என்னென்ன காரியங்களுக்கு சென்னை ராஜ்யத்திற்கு உதவி கிடைத்தது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*)

		Agriculture College Coimbatore.	Veterinary College. Madras.
(i)	Equipment	$39,619	$56,895
(ii)	Books	$6,988	$5,350
(iii)	Training of staff	Two staff of the Institute (already Trained) Five under training.	One trained. Three under training. Six proposed for training. (One American expert for teaching Dairy Science in the Madras Veterinary College).

(*b*) Not in cash. Only by way of books, equipments, training of State personnel in foreign countries and experts from abroad.

Rebate on the sale of handloom cloth

* 174 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கைத்தறித் துணி "ரிபேட்" தொகையை மத்திய சர்க்கார் குறைத்திருக்கிறார்களா?

(ஆ) இதனால் கைத்தறித் தொழில் இந்த ராஜ்யத்தில் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The rate of rebate on retail sales of handloom cloth continues to be 6 nP. in the rupee but the Government of India have reduced the rate of rebate on wholesale sales from 6 nP. to 3 nP. in the rupee with effect from 1st July 1959.

(*b*) It is too early to assess the effect of the reduction in the rate of rebate on wholesale sales.

MR. SPEAKER : There are few more questions. We will take up two or three minutes more to finish them. I will allow one supplementary for the hon. Member who put the question.

SRI S. M. ANNAMALAI : மற்ற நாட்களில் கேள்வி நேரங்கள் அரை மணி நேரத்திற்குள் முடிந்து விடுகின்றன. இன்றைக்கு அந்த அரை மணி நேரத்தை அதிகமாகக் கொடுத்து . . . .

MR. SPEAKER : முக்கியமான கேள்வி இருந்தால் உப கேள்விகளுக்கு அதிகமாக நேரம் கொடுக்கிறேன். இல்லாவிட்டால் ஐந்து நிமிஷங்களில் முடிக்கக் கொள்ளவேண்டும். என்று குறைவாக அவகாசம் கொடுக்கிறேன்.